முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சண்டிகேசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.03.2019, வியாழக்கிழமை

1. **ஞானயுகம் ஆக்க வந்தநல்**
**ஞானியே ஆறுமுக அரங்கனே**
**தானதருமம் செய்து கொண்டு**
**தருமபலம் பெருக்கி மக்களிடை**

2. மக்களிடை தன்னார்வ தொண்டு பெருக்கி
மாதவசியாக வாழும் தேசிகனே
தேக்கமிலா உன் வழி மக்கள் வர
தேறுவர் என்று உறுதி கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
**தெரியவே முன்னான்கீர் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 14ம் நாள் 28.03.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு சண்டிகேசர் யானும்**

4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான சமூகம் படைக்க
ஞானவான்களாக மக்களை மாற்றி
ஞானயுகம் படைக்க வேண்டி வந்த

5. வந்தநல் ஞானி அரங்கனே
வல்லமையான தலைமை குரு
சிந்தை வைத்து உலக மக்கள்
சிறப்பாய் ஏற்று வருதலுற

6. வருவதுடன் தருமத்தை ஏற்று
வழிமொழிந்து உலகமெங்கும்
தருமத்தை பெருக்கி வர
தரணியோர் தருமவான்களாகி சிறப்பர்

7. சிறப்புதரும் ஏழாம் படை வீடு
சேவித்து மக்கள் வருதலுற
மறுப்பிலா குமரகிரி எல்லை
மாதவசி அருள்பட நடக்கும்

8. நடக்கும் கோபூசை கலந்துமே
நாட்டிட தருமமிட உதவியே
தடையற ஞானவழிகளில் வந்து
தருமபலமுடன் அரங்கன் சீடர்களாகி

9. ஆகியே உலக வாழ்வை தொடர
அனுதினமும் ஞானிகள் பேரில்
மகிழ்ந்து பூசை செய்து வர
மண்ணுலகில் ஞானிகள் தயவும்

10. தயவும் ஆசியும் பெறுவதுடன்
தனவளம் தேட்டு வளமும் கூடி
நேயமான வாழ்வும் இல்லறமும்
நிலையான குருவருளும் திருவருளும் கூடி

11. கூடியே அரங்கன் சீடர்கள்
குருமார்க்கம் வந்த மக்கள்
தேடியே ஆளுமை பதவியென
திறம்பட உயர்ந்து சிறப்பர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சண்டிகேசர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

துன்பம்மிக்க கலியுகத்தினை மாற்றி ஞானயுகமாக ஆக்கிட அவதாரமாக வந்துதித்த நல்ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமாய் தானதருமங்களை அளவிலாது செய்து கொண்டு உலகினில் தருமபலத்தினை பெருக்கி மக்களிடையே தன்னார்வ தொண்டினை பெருக்கி மாதவசியாக வாழும் ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே தடையின்றி உமது வழியினிலே மக்களெல்லாம் உம்மை பின்தொடர்ந்து வரவர, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் என மக்களுக்கு உறுதியளித்து உலக நலன் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 14ம் நாள் 28.03.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சண்டிகேசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சண்டிகேசர்.

உலகினில் உயர்வான சமூகத்தினை படைத்து யுகமாற்றம் செய்திடவே மக்களை ஞானவான்களாக மாற்றி அவர்கள் மூலமாய் ஞானயுகம் படைத்திடவே அவதாரமாக யுகமாற்ற ஞானியாக வந்துதித்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் பெருமைமிக்க வல்லமையான தலைமை ஞானகுரு ஆவார்.

ஆதலினால் ஆறுமுக அரங்கன் மேல், முழு நம்பிக்கை வைத்து சீர்சிறப்பாய் அரங்கனை குருவாய் ஏற்றுக் கொண்டு, அரங்கனை பின்தொடர்ந்து வருவதுடன் அரங்கன் ஆற்றும் தானதருமச் செயல்களுக்கு பொருளுதவிகள் செய்து தருமங்களை தானும் செய்து உலக மக்களும் செய்திட உலகமெங்கும் தருமத்தை பரப்பி தருமபலத்தினை பெருக்கி வரவர, தருமம் செய்திட்ட உலகோரெல்லாம் பெரும் பணக்காரர்களாக ஆகி சிறப்பான வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கி வருவதுடன் ஞானபூமியாம் குமரகிரியில் மகா ஞானி அரங்கமகா தேசிகனாரின் அருளினால் நடக்கின்ற கோ பூஜைகளில் கலந்து பசுக்களுக்கு தருமமிட உதவிகள் செய்து, தடையேதும் இன்றி அரங்கனின் ஞானநெறிகளை ஏற்று கடைப்பிடித்து, ஞானவழிகளிலே வருகையுற்று தருமங்களைச் செய்து தருமபலம் பெருக்கி ஆறுமுக அரங்கனின் சீடர்களாக ஆகி, உலகியல் வாழ்வையும் தொடர்ந்து நடத்தி வந்து தினம்தினம் மறவாமல் ஞானிகள் பூசைகளை தடையின்றி செய்து வர வேண்டும்.

இவ்விதமே அரங்கனின் சீடர்களெல்லாம் செய்துவர, ஞானிகளின் தயவினை பெற்று ஞானிகளின் அருளாசிகளையும் பெறுவதுடன் பொருள் சேர்க்கையும், தொழில் அபிவிருத்தியும், நல்ல வருவாயும், வளமும் பெருகி அன்பும் பண்பும்மிக்க மகிழ்ச்சியான வாழ்வினை இல்லறத்துடன் வாழ்ந்து நிலையான குருவருளையும் திருவருளையும் பெற்று சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களும் அரங்கனை குருவாய் ஏற்று குருமார்க்கத்தில் வந்திட்ட மக்களும், வரும் ஞானயுகத்தினில் ஆளுமையும், பதவியும் பெற்று திறம்பட செயல்பட்டு உயர்வான நிலையினை அடைந்து சிறப்படைவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சண்டிகேசர்.

–சுபம்–